**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 65/2022**

**Prosecution witness : அ.சா. 8 Date : 26.06.2024**

| | |
|---|---|
| **Name : அருண்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது எடப்பாடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2022-ம் தேதி மாலை 06.30 மணிக்கு மேச்சேரி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாலு அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த கோவிந்தராஜ் த/பெ காளியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் CSR மனு ரசீது எண்.70/2021 என்ற எண்ணில் விசாரணை செய்து , விசாரணையின் முடிவில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.125/2021 u/Sec. 147, 294(பி), 323, 324, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

3. பிறகு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாலு புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 28.02.2021 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவ இடம் பொட்டனேரி பெரியாண்டி கோவில் அருகில் சென்று சாட்சிகள் சதீஷ் மற்றும் சங்கர்கணேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். வரைபடம் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் கோவிந்தராஜ், மகாலிங்கம், குமார், ராஜேஷ், கார்த்திகேயன், சதீஷ், சங்கர்கணேஷ் ஆகியோர்களை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாலு

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் வழக்கு கோப்பு என் வசம் ஒப்படைத்தன்பேரில் இவ்வழக்கில் காயமடைந்த கோவிந்தராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரசாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கில் காயமடைந்த நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் கருத்துரை தெரிவித்துள்ளார். எனவே பிரிவு மாறுதல் அறிக்கை வாயிலாக சட்டபிரிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 5 வரை கடந்த 20.04.2021 ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 14.04.2021ம் தேதி **நி.கு.எண்.125/2021 u/Sec. 147, 294(பி), 323, 324, 506(2) IPC லிருந்து u/Sec. 147, 294(பி), 323, 324, 506(2), 326 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சாஆ.6** ஆகும்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>.

7. கடந்த 23.02.2021ம் தேதியன்று பாலு அவர்கள் வாக்குமூலம் பெற்றதாக உள்ளது என்றால் ஆமாம். 27.02.2021ம் தேதியன்று என் வசம் ஒப்படைத்தார் முதல் தகவல் அறிக்கை என்றால் ஆமாம். அதன் பிறகு வழக்கு கோப்பை பெற்ற நான் மருத்துவர் மற்றும் பாலு ஆகிய இருவரை மட்டுமே விசாரணை செய்தேன் என்றால் ஆமாம். மறு விசாரணை தேவைப்படததால் செய்யவில்லை. பிறகு 03.03.2021ம் தேதியன்றுதான் நான் விபத்து பதிவேட்டில் உள்ள கருத்துரை பெற்றேன் என்றால் ஆமாம்.

8. பிறகு 14.04.2021ம் தேதியன்று தான் மருத்துவரை விசாரித்தேன் என்றால் ஆமாம். நான் எந்த தேதியில் குற்றப்பத்திரிக்கை பதிவு செய்தேன் என்றால் 14.04.2021ம் தேதி என்றால் சரிதான். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாலு அவர்கள் விசாரித்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து

பார்த்தேன். வாக்குமூலம் பெறுவதற்கு 7 நாட்கள் காலதாமதத்திற்கான காரணம் குறித்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாலு அவர்களை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் மருத்துவமனையிலிருந்து காலதாமதமாக தகவல் கிடைத்தால் சென்றோம்.

9. விபத்து பதிவேட்டில் மருத்துவரிடம் 6 பேர் அடித்ததாக (3 ஆண்கள், 3 பெண்கள்) இரும்பு ராடு மற்றும் கல், கத்தி ஆகியவற்றை கொண்டு அடித்தாக உள்ளது என்றால் ஆமாம். நான் மருத்துவரிடம் விசாரித்தபோது 21ம் தேதி காயம் குறித்த தகவலை தெரிவித்ததாக உள்ளது என்றால் ஆமாம். காலதாமதம் குறித்து நான் எந்த வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் ஆமாம். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பாலு அவர்கள் எதிரிகளை ஏற்கனவே முடிவு செய்துவிட்டு அதன்பிறகு வாக்குமூலம் பெறப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது என்றால் இல்லை.

10. நான் அதனை தெரிந்து எந்த வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அ.சா1 கோவிந்தராஜ் அவர்கள் மேச்சேரி காவல் நிலையத்திற்குள் வந்து காவல் துறையினரை அடிக்க முயற்சி செய்ததாக ஒரு வழக்கு CC199/2020 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்வம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. அ.சா1 அடிக்கடி காவல் நிலையம் வந்து செல்லும் நபர் என்பதால் அவருக்கு சாதகமாக நடந்து கொள்ளவேண்டி இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறில்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர்.2
மேட்டூர்.